## புது வகை நெல்

*150 வினு.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் இந்த ஆண்டு புதிய ரக நெல் ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில். அந்த நெல் ஒரு ஏக்கருக்கு என்ன விளைச்சல் தருகின்றது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) கருணு, காஞ்சி, காவேரி என்ற நெல் ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ‘ கருணு ’ என்ற நெல், ஐ.ஆர். 8 என்ற நெல்லுடன் ஏ.டி.டி. 27 என்ற நெல்லை மகரந்தச் சேர்க்கையினுல் ஒட்டுச் சேர்த்து கண்டுபிடிக்கப்பட்டு 1970-ல் வெளியிடப்பட்டது. இந்த நெல்லின் வயது 105 முதல் 110 நாட்கள் ஆகும். இந்த நெல்லை மழை, காற்று பாதிக்காது.

(இ) இந்நெல் ஏக்கருக்கு சராசரி 2,300 கிலோகிராம் மகசூலைக் கொடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் வேளாண்மைத் துறை அமைச்சர் பதில் அளிக்கையில் கருணு, காஞ்சி. சுஜாதா என்று எல்லாம் பெரர்கள் சொன்னுர்கள். இப்படிப்பட்ட பெயர் சூட்டு விழாக்கள் யார் செய்கிறுர்கள்? தனித் தமிழ்மொழிப் பெயர் வைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சுஜாதா என்று நான் சொல்லவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கோவை நெல் ஆராய்ச்சிக் கழகத்திலே கண்டுபிடிக்கப்பட்ட நெல்களிலே ஆண்டுக்கு குறைவாக போடுகின்ற மானுவாரிப் பயிர் என்று கண்டு பிடிக்கப்பட்டதா? அப்படிக் கண்டு பிடிக்க சாத்தியக் கூறுகள் அந்த ஆராய்ச்சிக் கழக மூலம் தென்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றுமில்லை. தனியாகக் கண்டுபிடித்தால் விவரம் தருகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : A number of paddy seeds have been evolved by Government. Most of them are intended for warmer areas. But cooler areas like Hosur do not have any new paddy variety which can withstand the cold climate there So the agriculturists feel there is very great need for suitable paddy seeds suitable for cooler areas like Hosur. May I know whether Government have evolved suitable paddy for such areas and if not will they take steps to evolve a suitable seed for such cooler areas ?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது அப்படி ஒன்றும் இல்லை.

**1971 டிசம்பர் 9]**

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே. புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டு கருணை என்ற நெல் காற்று. மழை இவைகள் எல்லாம் தாங்கக்கூடிய நெல் என்று சொல்லப்படுகிறது. ஆகவே எதையும் தாங்கக் கூடிய அந்த நெல்லை தமிழகம் பூராவும் பரப்பு வதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இது மழை காலத்தில் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்ற இடங்களிலே இப்போது நடப் படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் பயிர் பாதுகாப்புக்காக இது கண்டுபிடிக்கப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் ஏக்கருக்கு 3½ முதல் 4 டன் வரை, இதுவரை எந்த நெல்லும் உற்பத்திச் செய்ய முடியாத அளவுக்கு கண்டு முதல் கண்டிருக்கிறது என்பதைக் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** கருணை, காவேரி, காஞ்சி என்ற புதிய நெல்கள், மற்ற நெல்களைவிட தரத்திலே எந்த வகையிலே உயர்ந்தது? மற்ற நெல்களை விட விளைச்சலிலே எந்த அளவிலே அதிகமாகிறது என்பதை அரசு அறிவிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இந்த கருணை நெல் வயது 105 முதல் 110 நாட்கள் காலப் பயிராகும். அது ஏறத்தாழ 3½ டன் முதல் 4 டன் உற்பத்தி ஆகிறது. மேலும் அந்த நெல் நல்ல தரத்தையும் உடையதுமாக்கும். அதுபோலவே காஞ்சி 110 முதல் 115 நாட்களுக்குள் விளைகின்றது. தஞ்சை மாவட்டத்திற்குத் தனியாக குறுவை சாகுபடிக்கு உரியது. இந்த நெல் ஜூன் செப்டம்பரில் பயிரிட பயன்படுத்தப்படுகிறது. அதனுடைய தரம் உயர்ந்த தரம் ஆகும். அதுபோலவே காவேரி நெல் கூட ஜூன் செப்டம்பரில் 105-110 என்கிற குறுகிய கால பயிர். இந்நெல் நடுத்தர சன்ன நெல் வகையைச் சேர்ந்ததாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** இப்போது புதிய ரக நெல் ரகங் களைக் கண்டு பிடிப்பவர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்திடம் ஏதாவது சிறப்புத் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பாராட்டி பரிசு வழங்குவதற்காக இப்போது அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவரவர்களே, இதுபோல புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் நெல் ரகங்கள் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேல் எதிர்பார்க்கும் நல்ல பயன் கிடைப்பதில்லை. இதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரு ரகத்தைப் பயன்படுத்துவதில்லை. மூன்றாண்டு ஆனவுடன் அதைக் கட்டாயமாக மாற்றித்தான் ஆகவேண்டும். அந்த வகையில் தான் அரசு செயல்பட்டு வருகிறது.

**திரு. த. சோணையா :** தலைவரவர்களே, இந்தப் புதியரக நெல்லை இராமநாதபுரம் மாவட்டத்திலே புன்செய் நிலங்களிலே விதைப்பதாக இருந்தால், அதிகமாக வருமானம் கிடைக்கும் என்று தெரிய வந்திருக்கிறது. அப்படிப்பட்டப் புன்செய் நிலங்களில் பயிரிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** புன்செய் நிலங்களில் பயிரிடுவது பற்றி இன்னும் ஆராய்ச்சி முடியவில்லை.

பின்தங்கிய வகுப்பினருக்கு தொழில் நடத்தக் கடன்கள்

***210 வினா.—திரு. ஆ. பரந்தாமன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின்தங்கிய வகுப்பினருக்கு தொழில் நடத்துவதற்கான கடன்களை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டோருக்கு இப்போது வியாபாரம் செய்வதற்குக் கடன்கொடுப்பதுபோல் பொருளாதாரத்தில் மிகவும் சீர்குலைந்த நிலையிலே இருப்பவர்களுக்கு—பிற்பட்டோருக்கும் கடன் கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 250 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரை சிறு தொழில் நடத்த கடன் கொடுப்பதற்கு இப்போது ஏற்பாடு செய்ய குழு பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால் இப்போதிருக்கிற நெருக்கடியில் உடனடியாகச் செய்ய வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார். பாக்வேர்டு கிளாஸ் கமிஷன் பிற்பட்ட மக்களுக்கு கடன் கொடுப்பது நல்லதென்று பரிந்துரை செய்திருக்கிறதே. அதன் அடிப்படையில் உடனடியாக இந்த அரசாங்கம் கடன் கொடுப்பதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்திலாவது நிதி ஒதுக்க ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட குழுவின் சிபாரிசின்படி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் உதவி செய்கிறவகையில் கடன் கொடுக்கலாம் என்றிருக்கிறது. ஆகையால் பிற்படுத்தப்பட்ட மக்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை அணுகி, கடன் உதவி பெறலாம் என்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.